DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 77 /2020**

**Deposition of LW1 examined as PW1** Dt. 27.05.2025

| | |
|---|---|
| Name | ராஜா |
| Father's/Husband's Name | அன்பழகன் |
| Village | செம்பதனிருப்பு |
| Taluk | |
| Age | 49/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 27.05.2025

(A1 to A3 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கட்டிட தொழிலாளியாக வேலை செய்து வருகிறேன். கடந்த 01.07.2020 ம் தேதி காலை 10.00 மணியளவில் செம்பதனிருப்பு டிவி செட் அருகில் நின்று கொண்டிருந்த போது இளையராஜா என்னை குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே என்று தகாத வார்த்தையால் திட்டினார். அப்பாவை வைத்து கொண்டு அவருடைய சொத்தையும் வைத்து கொண்டு சாப்பிட்டு கொண்டு இருக்கிறாயா என்று திட்டினார். இளையராஜா கையில் வைத்திருந்த கம்பியால் என்னை தலையில் அடிக்க முற்பட்ட போது நான் தடுத்தேன். அப்போது எனது இடது கை கட்டைவிரல் நகத்தில் காயம் ஏற்பட்டது. இளையராஜாவின் மகன் கார்த்திக் ராஜா கட்டை மற்றும் ரிப்பரால் இடுப்பு மற்றும் முதுகில் தாக்கினார். இளையராஜாவின் மச்சான் தினேஷ் கட்டையால் முதுகு மற்றும் முதுகு பகுதிகளில் தாக்கினார். எனது அப்பா வயலில் மாடு மேய்த்து கொண்டிருந்தவரை எதிரிகள் வயலுக்கு சென்று கம்பி மற்றும் கட்டையால் தாக்கினார்கள். எனது அப்பாவிற்கு தலை மற்றும் கையிலும் எனது அம்மாவிற்கு இடுப்பு மற்றும் காலிலும் காயம் ஏற்பட்டது. எதிரிகள் தாக்கியதில் எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு சஞ்சீவ்காந்தி என்பவருடைய காரில் நாங்கள் மூவரும் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். மருத்துவமனையில் உள்நோயாளியாக 10 நாட்கள் சிகிச்சை எடுத்து கொண்டோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கட்டிட தொழிலாளியாக பணிபுரிந்து வருகிறேன். அதில் குறிப்பிட்ட என்ன வேலை செய்கிறேன் என்றால் கட்டிடம் தொடர்பான எல்லா வேலைகளையும் செய்வேன். என்னுடன் பிறந்தவர்கள் மூன்று பேர். நான் மூத்தவன் எனக்கு அடுத்து இளையராஜா அதற்கடுத்து இளையரசி. எனது தம்பி இளையராஜா உள்ளூரில் திருமணம் செய்து கொண்டார் என்றால்

27/5/25

சரிதான். அந்த திருமணத்திற்கு பிறகு நான் எனது அப்பா அம்மா ஆகியோர் இளையராஜாவிடம் பேசுவதில்லை என்றால் சரியல்ல. இரு குடும்பமும் சகஜமாகத்தான் இருந்தோம் என்றால் சரி தான். எனது அப்பா சொத்தை நானும் இளையராஜாவும் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். நானும் எனது அப்பாவும் சேர்ந்து கொண்டு இளையராஜாவிற்கு சொத்து எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் மொத்த சொத்தையும் நீங்களே வைத்து அனுபவித்து வருகிறீர்கள் என்றாலும் சரியல்ல. இது சம்பந்தமாக ஊரில் பஞ்சாயத்து செய்தார்கள் என்றால் சரிதான். எனக்கும் என் தம்பிக்கும் சண்டை ஏற்பட்டு என் தம்பி இளையராஜா வீட்டை நான் கொளுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. இது தொடர்பாக இளையராஜா என் மீது பாகசாலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. இது தொடர்பாக ஊர் பஞ்சாயத்து பேசி நான் எனது தம்பிக்கு ரூபாய் 10 ஆயிரம் கொடுத்து அதன் அடிப்படையில் பிரச்சினை முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னை மிரட்டி பத்தாயிரம் பெற்று கொடுத்து விட்டனர். சொத்தை பாகப்பிரிவினை செய்து கொடுக்காமல் நானும் என் தந்தையும் சேர்ந்து எங்கள் ஊரை சேர்ந்த விஜயகுமார் என்பவரிடம் விற்பனை செய்து விட்டோம் என்றால் சரியல்ல. எங்களது பாகத்தை மட்டுமே நாங்கள் விஜயகுமாரிடம் விற்பனை செய்தோம். நானும் எனது தந்தையும் சேர்ந்து கொண்டு தொடர்ச்சியாக இளையராஜா அவரிடமும் அவரது குடும்பத்தாரிடமும் பிரச்சனை செய்வதை வாடிக்கையாக கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. முன் விசாரணையில் எனக்கு கையில் காயம் ஏற்பட்டதாக தெரிவித் தகாயம் கட்டிட வேலையில் எனக்கு ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபரம் எனது ஊர் பஞ்சாயத்தாரர்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. முன்விசாரணையில் ரீப்பர் கட்டையால் எதிரிகள் தாக்கியதாக சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியில் பொய்யாக புகார் வாக்குமூலம் அளித்து அதனடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. சொத்து தொடர்பாக பாகசாலை காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் பஞ்சாயத்து பேசி அந்த பஞ்சாயத்தின் அடிப்படையில் நானும் எனது தந்தையும் நடந்து கொள்ளாததால் எங்களுக்கு இளையராஜா மீது தொடர்ந்து பகை இருந்து வந்தது என்று சொன்னால் சரியல்ல. அந்த பகையின் காரணமாக எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

M. [signature] 27/5/24

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை